අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/02/29/25/03/01-ඉංග්‍රීසි

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.07.

பெயர் .......................................

முகவரி .......................................

.......................................

தே.அ.அ.இல .......................................

கனம் ஐயா/ அம்மணி,

**<u>நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கிலப் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்காக டிப்ளோமாதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3- I (இ) இற்கு ஆட்சேர்த்தல் – (2021) 2024</u>**

மேற்படி விடயம் தொடர்பில் 2021.03.15ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை அறிவித்தலுக்கமைய 2021.12.12ம் திகதியன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சை மற்றும் 2024.05.10, 11, 13 மற்றும் 20ம் திகதிகளில் கல்வி அமைச்சினால் பொது நேர்முகப் பரீட்சையை நடாத்தியதன் பின்னர் நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை முன்னுரிமை வரிசைப் படி தேசிய பாடசாலைகளில் **ஆங்கிலப் பாடத்திற்கான** ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக தாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. அதற்கமைய தங்களுக்குரிய நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம் 2024.07.30ம் திகதி புதன் கிழமையன்று மு.ப 9.00 மணிக்கு அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் அலரி மாளிகையில் நடாத்தப்படவுள்ளது. ஆகையால், குறித்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காக தாங்கள் அன்றைய தினத்தில் மு.ப 07.00 மணியளவில் தேசிய அடையாள அட்டை சகிதம் கங்காராமை விகாரைக்கு (பேரே வாவி) அண்மையில் அமைந்துள்ள நுழைவாயிலூடாக மாத்திரம் அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். (தேசிய அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றைக் கொண்டு வருவது கட்டாயமாகும்)

03. நியமனம் பெறவுள்ள ஆண்கள் கறுப்பு நிற காற்சட்டை, வெள்ளை மேற்சட்டை அணிந்து வருகை தரல் வேண்டும் என்பதுடன் நியமனம் பெறவுள்ள பெண் நியமனதாரர்கள் வெள்ளை அல்லது கிரீம் நிறத்திலான சாரி அல்லது ஒசரி அணிந்து வருகை தரல் வேண்டும்.

05. . அன்றைய தினம் **தங்களுக்கு வழங்கப்படும் இலக்கத்தை கட்டாயமாக தங்களது உடையில் இடது புறத்தில் மேற்பக்கமாக பொருத்திக் கொள்ள வேண்டும்** என்பதுடன் நியமனம் வழங்கும் வைபவம் நிறைவடையும் வரையில் மணபத்தினுள் தரித்திருத்தல் வேண்டும் என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

06. இவ் வைபவத்தில் நியமனம் பெறவுள்ளவர்கள் மாத்திரமே கலந்துகொள்ள வேண்டும் என்பதுடன், வேறு எந்த நபரையும் வைபவம் நடைபெறும் மண்டபத்தினுள் அழைத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

07. இதில் பங்கேற்பதகாக பிரயாணச் செலவினங்களோ அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

நம்பிக்கைக்குரிய,

ஏ.ஜே.எஸ்.எஸ் எதிரிசூரிய
மேலதிக செயலாளர் (தாபனம்)
கல்விச் செயலாளருக்காக